## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 3-10 - சன்மம்பலபல
### (எம்பெருமானது அவதார குணசேஷ்டிதங்களை அனுபவிக்கையாலே தமக்கு ஒரு குறையுமின்றி எல்லா இஷ்டங்களும் உண்டானமையை அருளிச் செய்தல்)

2996 * சன்மம் பல பல செய்து வெளிப்பட்டுச் *
சங்கொடு சக்கரம் வில் *
ஒண்மை உடைய உலக்கை ஒள்வாள் * தண்டு
கொண்டு புள்ளூர்ந்து ** உலகில்
வன்மை உடைய அரக்கர் * அசுரரை
மாளப் படை பொருத *
நன்மை உடையவன் சீர் பரவப் பெற்ற *
நான் ஓர் குறைவிலனே 1

2997 குறைவில் தடங்கடல் கோளரவேறித் * தன்
கோலச் செந்தாமரைக் கண் *
உறைபவன் போல ஓர் யோகு புணர்ந்த *
ஒளி மணிவண்ணன் கண்ணன் **
கறையணி மூக்குடைப் புள்ளைக் கடாவி *
அசுரரைக் காய்ந்த அம்மான் *
நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும் *
யான் ஒரு முட்டிலனே 2

2998 முட்டில் பல்போகத்து ஒரு தனி நாயகன் *
மூவுலகுக்குரிய *
கட்டியைத் தேனை அமுதை * நன்பாலைக்
கனியைக் கரும்பு தன்னை **
மட்டவிழ் தண்ணந்துழாய் முடியானை
வணங்கி * அவன் திறத்துப்
பட்ட பின்னை * இறையாகிலும் * யான் என்
மனத்துப் பரிவிலனே 3

2999 பரிவின்றி வாணனைக் காத்தும் என்று * அன்று
படையொடும் வந்தெதிர்ந்த *
திரிபுரம் செற்றவனும் மகனும் * பின்னும்
அங்கியும் போர் தொலைய **
பொரு சிறைப் புள்ளைக் கடாவிய * மாயனை
ஆயனைப் பொற்சக்கரத்து
அரியினை * அச்சுதனைப் பற்றி * யான்
இறையேனும் இடரிலனே 4

3000 இடரின்றியே ஒரு நாள் ஒரு போழ்தில் *

எல்லா உலகும் கழிய *
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் *
உடன் ஏறத் திண்தேர் கடவி **
சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் *
வைதிகன் பிள்ளைகளை **
உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி *
ஒன்றும் துயரிலனே 5

3001 துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி *
நின்ற வண்ணம் நிற்கவே *
துயரில் மலியும் மனிசர் பிறவியில் *
தோன்றிக் கண் காண வந்து **
துயரங்கள் செய்து தன் தெய்வ நிலை உலகில் *
புக உய்க்கும் அம்மான் *
துயரமில் சீர்க் கண்ணன் மாயன் புகழ் துற்ற *
யான் ஓர் துன்பமிலனே 6

3002 துன்பமும் இன்பமுமாகிய * செய்வினையாய்
உலகங்களுமாய் *
இன்பமில் வெந்நரகாகி * இனிய
நல்வான் சுவர்க்கங்களுமாய் **
மன் பல்லுயிர்களுமாகிப் * பல பல
மாய மயக்குகளால் *
இன்புறும் இவ்விளையாட்டுடையானைப் பெற்று *
ஏதும் அல்லலிலனே 7

3003 அல்லலில் இன்பம் அளவிறந்தெங்கும் *
அழகமர் சூழ் ஒளியன் *
அல்லி மலர்மகள் போக மயக்குக்கள் *
ஆகியும் நிற்கும் அம்மான் **
எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு *
எல்லாக் கருமங்களும் செய் *
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி *
யான் ஓர் துக்கமிலனே 8

3004 துக்கமில் ஞானச் சுடரொளி மூர்த்தி *
துழாய் அலங்கல் பெருமான் *
மிக்க பல்மாயங்களால் விகிர்தம் செய்து *
வேண்டும் உருவு கொண்டு **
நக்கபிரானோடு அயன் முதலாக *
எல்லாரும் எவையும் * தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லானைப் பெற்று *
ஒன்றும் தளர்விலனே 9

3005 தளர்வின்றியே என்றும் எங்கும் பரந்த *
தனி முதல் ஞானம் ஒன்றாய் *
அளவுடை ஐம்புலங்கள் அறியா வகையால் *
அருவாகி நிற்கும் **
வளரொளி ஈசனை மூர்த்தியைப் * பூதங்கள்
ஐந்தை இருசுடரை *
கிளரொளி மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி *
யான் என்றும் கேடிலனே 10

3006 * கேடில் விழுப்புகழ்க் கேசவனைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன *
பாடல் ஓராயிரத்துள் * இவையும்[1] ஒரு பத்தும்
பயிற்ற வல்லார்கட்கு ** அவன்
நாடும் நகரமும் நன்குடன் காண *
நலனிடையூர்தி பண்ணி *
வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்கும்
தரும் * ஒரு நாயகமே 11

**அடிவரவு:** சன்மம் குறைவு முட்டில் பரிவு இடர் துயர் துன்பம் அல்லல்
துக்கம் தளர்வு கேடில் ஒருநாயகம்

[1] இவை